

கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், கிருங்காக்கோட்டை கிராமத்தில், 21.05.2023 அன்று நடைபெற்ற ஜல்லிக்கட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்து பார்வையிட்டார்.

## சந்திரயான் 3 எப்போது ஏவப்படும்?

டெல்லி, மே 23 - இஸ்ரோ சார்பில் பல்வேறு விண்வெளி ஆய்வுப் பணிகள் முன்னெடுக்க ப்பட்டுள்ளது. குறைந்த செலவில் இந்தியா மேற்கொள்ளும் ஒவ்வொரு விண்வெளி திட்டமும் உலக நாடுகளுக்கு பெரும் வியப்பைத் தருவதாகவே அமைந்துள்ளது.

அதிலும் குறிப்பாக இந்தியாவின் சந்திரயான் திட்டம் சர்வதேச அளவில் கவனம் பெற்றது. 2008ஆம் ஆண்டு ஏவப்பட்ட சந்திரயான் திட்டம் வெற்றி பெற்ற நிலையில், 2019ஆம் ஆண்டு சந்திரயான் 2ஐ இஸ்ரோ அனுப்பியது. அதில் லேண்டர் நிலவில் தரையிறங்குவதில் மட்டும் பிரச்சினை ஏற்பட்டது.

### ம.இராஜகுமார் தலைமை! எம்.பி.இராஜேஷ் வரவேற்புரை!

# பெரம்பலூர் ஒன்றியத்தில் சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

### ஆ.இராசா எம்.பி. - அமைச்சர் சா.சி.சிவசங்கர் - சேலம் சுஜாதா சிறப்புரை!

பெரம்பலூர், மே 23 - பெரம்பலூர் ஒன்றிய தி.மு.க. இளைஞரணி சார்பில் நடைபெறும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசின் ஈடில்லா ஆட்சி ஈராண்டே சாட்சி சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம் இன்று (23.5.2023 -செவ்வாய்க்கிழமை), மாலை 6.00 மணி நாவலூரில் நடைபெறுகிறது.

பெரம்பலூர் ஒன்றிய கழக செயலாளர் ம. இராஜ்குமார் தலைமையும், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் எம்.பி. இராஜேஷ் வரவேற்புரையும் ஆற்றுகின்றனர்.

து.ஹரிபாஸ்கர், தங்க. கமல், டி.ஆர்.சிவசங்கர், ஏ.எம்.கே.கரிகாலன், சி. காட்டு ராஜா, ஏ.ரசூல் அகமது, வி.ஜி.நவீன்ராஜ், நேதாஜி, அந்தாளி துரை மற்றும் பலர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மேனாள் ஒன்றிய அமைச்சர், கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா, அமைச்சர் அரியலூர் மாவட்ட கழக செயலாளர் சா. சி.சிவசங்கர், தலைமைக் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, மாவட்டக் கழக செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன், எம்.பிரபாகரன், எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மு.அட்சயகோபால், என். இராஜேந்திரன், எஸ். அண்ணாதுரை, இரா.ப.பரமேசு குமார், செ.வல்லபன், ஆ. கலிய பெருமாள், கி.முகுந்தன், ஆர்.சரவணன், மு.வெங்கடேசன், கே.கே.குமார், ஆறுமுகம், மு.விஜயரத்தினம், மு.இராமச்சந்திரன், இரா.கலையரசன், நா. ஆதித்த யன், பெ.இரவிச்சந்திரன், ந.தேவகி நடராஜன், வா.இராஜ் குமார், சி.இராஜேஷ், சு.பிரபு உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

க.வரதராஜன் நன்றி கூறுகிறார்.

### சவுதி அரேபியாவில் வேலைக்குச் சென்ற ஓட்டுநர்கள் மீது தாக்குதல்!

# பாதிக்கப்பட்டவர்களை இந்தியா அழைத்துவர நடவடிக்கை எடுப்பீர்!

### டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. வெளியுறவுத்துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, மே 23 - வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி வெளியுறவுத் துறை அமைச்சர் சுப்பிரமணியம் செயசங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் கூறியுள்ளதாவது:-

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த சீனிவாசனின் மகன் அறிவழகன், தஞ்சாவூரைச் சேர்ந்த பரமசிவத்தின் மகன் ராஜேஷ் கண்ணா மற்றும் ராமச்சந்திரனின் மகன் ராஜா, திருச்சியில் உள்ள ஏஜென்ட் மூலம் இம்மூவரும் ஓட்டுநர் வேலைக்காக சவுதி அரேபியாவுக்குச் சென்றனர். மேலும், இவர்களுக்கு உணவு மற்றும் தங்குமிடத்துடன் மாதத்திற்கு 3000 ரியால்கள் சம்பளம் வழங்குவதாக முகவர் உறுதியளித்தார். இருப்பினும், சவுதியை அடைந்த பிறகு, முதலாளிகளான அப்துல் ரஹ்மான் ரியாத்காஃபில் மற்றும் அப்துல் ரஹ்மான் மைத் அவர்களுக்கு மாதம் 1500 ரியால்கள் மட்டுமே சம்பளமாக வழங்கினர் மேலும் அவர்களுக்கு சம்பளத்துடன் தங்குமிடம் மற்றும் உணவு வழங்க மறுத்து விட்டனர்.

மேலும் சம்பளம் குறைக்கப்ப ட்டது, தங்குமிடம் மற்றும் உணவு வழங்க தவறியதை ஊழியர்கள் கேள்வி எழுப்பிய போது, முதலில் ராஜா தாக்கப்பட்டு மூன்று நாட்களுக்கும் மேலாக இருட்டு அறையில் அடைக்கப்பட்டார், பின்னர் மற்ற இருவரும் முதலாளியின் கையாட்களால் தாக்கப் பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களின் பாஸ்போர்ட்கள் முதலாளியால் கைப்பற்றப் பட்டு, அவை இன்னும் முதலாளியின் பாதுகாப்பில் உள்ளன. கடந்த (14.05.2023 - ஞாயிற்றுக்கிழமை) முதலாளிகளுக்கு பயந்து பாதிக்கப்பட்டவர்கள் ரியாத்தில் உள்ள இந்திய தூதரகத்தில் தஞ்சம் கோரினர், ஆனால் அவர்கள் தொழிலாளர் நீதிமன்றத் தில் ஒப்படைக்கப்பட்டனர். தொழிலாளர் நீதிமன்றம் இதனை விசாரிக்கப் படும் என்று உறுதி அளித்ததே தவிர, இடைக்கால நிவாரணம் எதுவும் வழங்கவில்லை. தற்போது, பாதிக்கப்பட்டவர்கள் சாலையில் ஆங்காங்கே மற்றும் மசூதிகளில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

எனவே, பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை மற்றும் பாதுகாப்பு குறித்து அவர்களது குடும்பத்தினர் ஆழ்ந்த கவலையில் இருப்பதால், பாதிக்கப்பட்டவர்களை விரைவில் இந்தியா அழைத்து வர உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி கடிதத்தில் கூறியுள்ளார்.

### கூட்டாட்சி தத்துவத்தையே பா.ஜ.க. அரசு கேலிக் கூத்தாக்கியுள்ளது!

# ஆளுநரிடம் அதிகாரத்தை ஒப்படைக்கும் முயற்சி!

### ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் கண்டனம்!

சென்னை, மே 23 - ஒன்றிய அரசுக்கு எதிராக உச்சநீதி மன்றம் வழங்கிய தீர்ப்பையடுத்து புதிய சட்டத்தை உருவாக்கி ஆளுநருக்கு அதிகாரம் கொடுக்க முயற்சிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு என்றும் இது கூட்டாட்சி தத்துவத்தையே பா.ஜ.க. அரசு கேலிக்கூத்தாக்கியுள்ளது என ‘தீக்கதிர்’ நாளேடு தனது 22.5.2023 தேதிய இதழில் தலையங்கம் தீட்டியுள்ளது.

அது வருமாறு:-

தேசியத் தலைநகர குடிமைப் பணி ஆணையத்தை உருவாக்குவதற்கான அவசரச் சட்டத்தை பிறப்பித்துள்ளதன் மூலம் உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை ஒன்றிய அரசு நீர்த்துப் போகச் செய்துள்ளது. மேலும் மக்களால் தேர்வு செய்யப்பட்ட தில்லி





மாநில அரசின் அதிகா ரத்தை கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

தில்லியில் குடிமைப் பணி அதிகாரிகளை யார் கட்டுப்படுத்துவது என்று ஒன்றிய அரசுக்கும் தில்லி மாநில அரசுக்கும் இடையே தொடர்ந்து சர்ச்சை எழுந்து வந்தது. துணை நிலை ஆளுநர் மூலம் தில்லி அரசின் அதிகாரத்தை ஒன்றிய அரசு அபகரித்து வந்தது.

இதை எதிர்த்து தில்லி மாநில ஆம் ஆத்மி அரசு உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கில் தில்லிக்கு மாநில அந்தஸ்து இல்லையென்றாலும் சட்டம் இயற்றும் அதிகாரம் அம்மாநில சட்டமன்றத்திற்கு உள்ளது; ஜனநாயக நாட்டில் துணை நிலை ஆளுநரை விட மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிடமே அதிகாரம் இருக்க வேண்டும். குடிமைப் பணி அதிகாரிகளை கட்டுப் படுத்தும் அதிகாரம் தில்லி அரசுக்கே உள்ளது என்றும் உச்சநீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்தது.

நீண்ட நெடிய விசாரணைக்குப் பின்பே இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் இந்த தீர்ப்பை ரத்து செய்யும் வகையில் ஒன்றிய அரசு அவசரச் சட்டம் ஒன்றை நிறைவேற்றி யுள்ளது. இதன் படி தேசிய தலைநகர குடிமைப்பணி ஆணையத்திற்கு தில்லி முதல்வர் தலைமை தாங்குவார் என்றும், ஆனால் நிர்வாகியாக துணை நிலை ஆளுநரே இருப்பார் என்றும் குடிமைப் பணி அதி காரிகள் நியமனம் மற்றும் பணி மாறுதல் விவகா ரத்தில் துணைநிலை ஆளுநரின் முடிவே இறுதியானது என்றும், இந்த அவசரச் சட்டம் கூறு கிறது. இதற்கு குடியரசுத் தலைவரும் ஒப்புதல் அளித்துள்ளார்.

இத்தகைய அவசரச் சட்டத்தை நிறைவேற்றி யுள்ளதன் மூலம் உச்சநீதிமன்றம் அங்கீகரித்த கூட்டாட்சித் தத்துவத்தை ஒன்றிய அரசு கேலிக் கூத்தாக்கியுள்ளது. மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசுக்கே அதிகாரம் என்பதை அர்த்தமிழக்கச் செய்து ஒன்றிய அரசின் கைப்பாவையான துணை நிலை ஆளுநருக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளது. இதன்மூலம் தில்லி அரசின் அதிகாரத்தை ஒன்றிய அரசு கைப்பற்றிக் கொள்ள முயல்கிறது.

குடிமைப்பணி அதிகாரிகள் நியமனம் மற்றும் பணி மாறுதல் ஒன்றிய அரசிடம் இருந்தால் மக்க ளால் தேர்வு செய்யப்பட்ட மாநில அரசின் உத்தர வுகளுக்கு அவர்கள் கட்டுப்பட மாட்டார்கள். முடிந்தவரை முட்டுக் கட்டை போட்டு ஒன்றிய அரசுக்கு ஒத்திசைவாக நடந்து கொள்ளவே முயல்வார்கள். இதன் மூலம் நிர்வாக முடக்கம் ஏற்படும். மக்களால் தேர்வு செய்யப்பட்ட சட்ட மன்றம் என்பது வெறும் அலங்கார சபையாகவே இருக்கும். உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்து கொண்டே மறுபுறத்தில் அந்த தீர்ப்பை ஒன்றுமில்லாமல் செய்யும் அவசரச் சட்டத்தை நிறைவேற்றியிருப்பது ஒன்றிய அரசின் எதேச்சதிகாரப் போக்கையே காட்டுகிறது.

இவ்வாறு ‘தீக்கதிர்’ தலையங்கத்தில் தனது கண்டனத்தை பதிவிட்டுள்ளது.

## ‘வாட்ஸ் அப்’ பில் வந்த செய்தி!

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 08/11/2016 இறப்பு 30/09/2023



ஏழே ஆண்டுகளில் மாண்டுபோக இருப்பவனே. உலகிலேயே மரணிக்கும் தேதி அறிந்தவன் நீ ஒருவனே

என்றும் உன் நினைவில்

# இந்தியக் குடிமகன்

### இராணிப்பேட்டை மாவட்டத்தில்

# இளைஞர் அணி சார்பில் ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக தெருமுனைக் கூட்டங்கள்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை மாவட்டத்தில் நகர / ஒன்றிய / பேரூர் வாரியாக இளைஞர் அணி சார்பில் இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின்அறிவிப்புக்கு இணங்க மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி.அவர்களின் ஆலோசனைப்படி திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தொடர் தெருமுனை கூட்டங்கள், கீழ்க்கண்ட 51 இடங்களில் நடைபெறும் :

| தேதி | ஒன்றியம் / நகரம் / பேரூர் | நேரம் | இடம் | பேச்சாளர் |
|---|---|---|---|---|
| 25.05.2023 வியாழக்கிழமை | காவேரிப்பாக்கம் வடக்கு ஒன்றியம் | மாலை 5.30 | பானாவரம் | ஆம்பூர் தருமன் |
| 25.05.2023 வியாழக்கிழமை | காவேரிப்பாக்கம் வடக்கு ஒன்றியம் | மாலை 6.30 | வேடந்தாங்கல் | ஆம்பூர் தருமன் |
| 26.05.2023 வெள்ளிக்கிழமை | நெமிலி மேற்கு ஒன்றியம் | மாலை 5.30 | மேலப்புலம் புதூர் | முரசொலி மூர்த்தி |
| 26.05.2023 வெள்ளிக்கிழமை | நெமிலி மேற்கு ஒன்றியம் | மாலை 6.30 | வேட்டாங்குளம் | முரசொலி மூர்த்தி |
| 26.05.2023 வெள்ளிக்கிழமை | பணப்பாக்கம் பேரூர் | மாலை 7.30 | பேருந்து நிலையம் | முரசொலி மூர்த்தி |
| 26.05.2023 வெள்ளிக்கிழமை | நெமிலி மத்திய ஒன்றியம் | மாலை 5.30 | காட்டுப்பாக்கம் | ஆம்பூர் தருமன் |
| 26.05.2023 வெள்ளிக்கிழமை | நெமிலி மத்திய ஒன்றியம் | மாலை 6.30 | நாகவேடு | ஆம்பூர் தருமன் |
| 26.05.2023 வெள்ளிக்கிழமை | நெமிலி பேரூர் | மாலை 7.30 | பேருந்து நிலையம் | ஆம்பூர் தருமன் |
| 27.05.2023 சனிக்கிழமை | அரக்கோணம் மேற்கு ஒன்றியம் | மாலை 6.00 | குருவராஜபேட்டை | முரசொலி மூர்த்தி |
| 27.05.2023 சனிக்கிழமை | அரக்கோணம் மேற்கு ஒன்றியம் | மாலை 7.00 | சாலை | முரசொலி மூர்த்தி |
| 27.05.2023 சனிக்கிழமை | சோளிங்கர் கிழக்கு ஒன்றியம் | மாலை 8.00 | கூடலூர் | முரசொலி மூர்த்தி |
| 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை | இராணிப்பேட்டை நகரம் | மாலை 6.00 | காரை | மதிமாறன் |
| 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை | இராணிப்பேட்டை நகரம் | மாலை 7.00 | இராஜேஸ்வரி திரையரங்கம் அருகில் | மதிமாறன் |
| 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை | விளாப்பாக்கம் பேரூர் | மாலை 5.30 | பேருந்து நிலையம் | உடுமலை தண்டபாணி |
| 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை | ஆற்காடு மேற்கு ஒன்றியம் | மாலை 6.30 | தாழனூர் | உடுமலை தண்டபாணி |
| 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை | ஆற்காடு மேற்கு ஒன்றியம் | மாலை 7.30 | உப்புபேட்டை | உடுமலை தண்டபாணி |
| 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை | அரக்கோணம் கிழக்கு ஒன்றியம் | மாலை 6.00 | முள்வாய் | சேர்க்காடு கென்னடி |
| 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை | அரக்கோணம் கிழக்கு ஒன்றியம் | மாலை 7.00 | மோசூர் | சேர்க்காடு கென்னடி |
| 28.05.2023 ஞாயிற்றுக்கிழமை | தக்கோலம் பேரூர் | மாலை 8.00 | மேல்பஜார் | சேர்க்காடு கென்னடி |
| 29.05.2023 திங்கட்கிழமை | வாலாஜா கிழக்கு ஒன்றியம் | மாலை 6.00 | படியம்பாக்கம் | கோவி செழியன்.MLA |
| 29.05.2023 திங்கட்கிழமை | வாலாஜா கிழக்கு ஒன்றியம் | மாலை 7.00 | சாத்தம்பாக்கம் | கோவி செழியன்.MLA |
| 29.05.2023 திங்கட்கிழமை | வாலாஜா நகரம் | மாலை 6.00 | பேருந்து நிலையம் | முரசொலி மூர்த்தி |
| 29.05.2023 திங்கட்கிழமை | வாலாஜா நகரம் | மாலை 7.00 | அணைக்கட்டு கூட்ரோடு | முரசொலி மூர்த்தி |
| 29.05.2023 திங்கட்கிழமை | அரக்கோணம் மத்திய ஒன்றியம் | மாலை 6.00 | வளர்புரம் | கந்திலி கரிகாலன் |
| 29.05.2023 திங்கட்கிழமை | அரக்கோணம் மத்திய ஒன்றியம் | மாலை 7.00 | வடமாம்பாக்கம் | கந்திலி கரிகாலன் |
| 29.05.2023 திங்கட்கிழமை | அரக்கோணம் நகரம் | மாலை 8.00 | இந்திராகாந்தி சிலை, ஜோதி நகர் | கந்திலி கரிகாலன் |
| 29.05.2023 திங்கட்கிழமை | சோளிங்கர் நகரம் | மாலை 6.00 | பேருந்து நிலையம் | தூத்துக்குடி சரத்பாலா |
| 29.05.2023 திங்கட்கிழமை | சோளிங்கர் மத்திய ஒன்றியம் | மாலை 7.00 | ரெண்டாடி | தூத்துக்குடி சரத்பாலா |
| 29.05.2023 திங்கட்கிழமை | சோளிங்கர் மத்திய ஒன்றியம் | மாலை 8.00 | மேல் வேங்கடாபுரம் | தூத்துக்குடி சரத்பாலா |
| 30.05.2023 செவ்வாய்கிழமை | காவேரிப்பாக்கம் பேரூர் | மாலை 4.30 | பார்க் | கோவி செழியன்.MLA |
| 30.05.2023 செவ்வாய்கிழமை | காவேரிப்பாக்கம் தெற்கு ஒன்றியம் | மாலை 6.00 | வேகாமங்கலம் | கோவி செழியன்.MLA |
| 30.05.2023 செவ்வாய்கிழமை | காவேரிப்பாக்கம் தெற்கு ஒன்றியம் | மாலை 7.00 | அவுளூர் | கோவி செழியன்.MLA |
| 30.05.2023 செவ்வாய்கிழமை | நெமிலி கிழக்கு ஒன்றியம் | மாலை 6.00 | சிததேரி | தூத்துக்குடி சரத்பாலா |
| 30.05.2023 செவ்வாய்கிழமை | நெமிலி கிழக்கு ஒன்றியம் | மாலை 7.00 | சம்பத்ராயன்பேட்டை | தூத்துக்குடி சரத்பாலா |
| 30.05.2023 செவ்வாய்கிழமை | வாலாஜா மத்திய ஒன்றியம் | மாலை 6.00 | சிப்காட் | கந்திலி கரிகாலன் |
| 30.05.2023 செவ்வாய்கிழமை | வாலாஜா மத்திய ஒன்றியம் | மாலை 7.00 | மணியம்பட்டு | கந்திலி கரிகாலன் |
| 30.05.2023 செவ்வாய்கிழமை | அம்மூர் பேரூர் | மாலை 8.00 | பேருந்து நிலையம் | கந்திலி கரிகாலன் |
| 30.05.2023 செவ்வாய்கிழமை | சோளிங்கர் மேற்கு ஒன்றியம் | மாலை 6.00 | வேலம் | தமிழ் கொண்டான் |
| 30.05.2023 செவ்வாய்கிழமை | சோளிங்கர் மேற்கு ஒன்றியம் | மாலை 7.00 | கோவிந்தச்சேரி குப்பம் | தமிழ் கொண்டான் |
| 31.05.2023 புதன்கிழமை | திமிரி மேற்கு ஒன்றியம் | மாலை 5.30 | தாமரைபாக்கம் | தூத்துக்குடி சரத்பாலா |
| 31.05.2023 புதன்கிழமை | திமிரி மேற்கு ஒன்றியம் | மாலை 6.30 | M.N. பாளையம் | தூத்துக்குடி சரத்பாலா |
| 31.05.2023 புதன்கிழமை | ஆற்காடு நகரம் | மாலை 5.30 | அண்ணாசிலை | C.V.M.P.எழிலரசன் MLA |
| 31.05.2023 புதன்கிழமை | ஆற்காடு நகரம் | மாலை 6.30 | பேருந்து நிலையம் | C.V.M.P.எழிலரசன் MLA |
| 31.05.2023 புதன்கிழமை | ஆற்காடு கிழக்கு ஒன்றியம் | மாலை 7.30 | மாங்காடு | C.V.M.P.எழிலரசன் MLA |
| 31.05.2023 புதன்கிழமை | திமிரி பேரூர் | மாலை 6.00 | பேருந்து நிலையம் | சேர்க்காடு கென்னடி |
| 31.05.2023 புதன்கிழமை | திமிரி கிழக்கு ஒன்றியம் | மாலை 7.00 | வாழைப்பந்தல் | சேர்க்காடு கென்னடி |
| 31.05.2023 புதன்கிழமை | கலவை பேரூர் | மாலை 8.00 | பேருந்து நிலையம் | சேர்க்காடு கென்னடி |
| 31.05.2023 சனிக்கிழமை | கணியம்பாடி ஒன்றியம் | மாலை 6.00 | முஞ்சூர்பட்டு | தமிழ்.க.அமுதரசன் |
| 31.05.2023 சனிக்கிழமை | கணியம்பாடி ஒன்றியம் | மாலை 7.00 | வேப்பம்பட்டு | தமிழ்.க.அமுதரசன் |
| 31.05.2023 புதன்கிழமை | மேல் விஷாராம் நகரம் | மாலை 6.00 | ஹாஜி பேட்டை | கோவி செழியன்.MLA |
| 31.05.2023 புதன்கிழமை | மேல் விஷாராம் நகரம் | மாலை 7.00 | புதுப்பேட்டை | கோவி செழியன்.MLA |

**அமைச்சர் ஆர்.காந்தி**
செயலாளர்
இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.